## டிசம்பர் – 06 – வியாழன்

**புனித நிக்கொலா**

**மனிதர்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்! திபா. 118:8**

-----------------------------------------------------------------

### முதல் வாசகம் : ஏசாயா 26 : 1 - 6

அந்நாளில் யூதா நாட்டில் இந்தப் பாடல் பாடப்படும் நமக்கொரு வலிமைமிகு நகர் உண்டு நம்மைக் காக்க அவர் கொத்தளங்களை அமைத்துள்ளார் வாயில்களைத் திறந்து விடுங்கள் அவர்மீது நம்பிக்கை கொண்ட நேர்மையான மக்களினம் உள்ளே வரட்டும். அவர்கள் மனஉறுதி கொண்டவர்கள் உம்மீது நம்பிக்கை உடையவர்கள் அவர்களை அமைதியால் நீர் உறுதிப்படுத்துகின்றீர். ஆண்டவர்மீது என்றென்றும் நம்பிக்கை கொள்ளுங்கள் ஏனெனில், ஆண்டவர், என் ஆண்டவர் என்றுமுள கற்பாறை! உயரத்தில் வாழ்வோரை அவர் தாழ்த்துகின்றார் வானுற உயர்ந்த நகரைத் தகர்க்கின்றார் அதைத் தரைமட்டமாக்கி, புழுதியோடு புழுதியாக, மண்ணோடு மண்ணாகச் செய்கின்றார். காலடிகள்-எளியோரின் காலடிகளும் ஏழைகளின் பாதங்களும்-அதை மிதிக்கும்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்

### நற்செய்தி : மத்தேயு 7 : 21, 24 – 27

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது ˙ என்னை நோக்கி, "ஆண்டவரே, ஆண்டவரே" எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர். ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக்கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம்வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழை பெய்தது ஆறு பெருக்கெடுத்து ஓடியது பெருங்காற்று வீசியது. அவை அவ்வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை. ஏனெனில் பாறையின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது. நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது தம் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்த். ஆறு பெருக்கெடுத்து ஓடிய். பெருங் காற்று வீசியது. அவை அவ்வீட்டைத் தாக்க, அது விழுந்தது. இவ்வாறு பேரழிவு நேர்ந்தது" என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள நாங்கள் வாழும் வெளிவேடமான வாழ்க்கை பற்றி சிந்திக்க அழைக்கின்றது. ஏனெனில் இறைவார்த்தையை வாசித்து ஏற்றுக் கொள்ளாததால்தான் இவ்வாறு வாழ்கின்றோம். இறைவார்த்தையை ஏற்று அதன்படி வாழ்ந்தோமேயானால் உறுதியானதும், இறைவன் எங்களிடம் எதிர்பார்க்கும் வாழ்வாகவும் காணப்படும். ஆனால் நாங்கள் மற்றவர்கள் பார்க்க வேண்டும், எங்களைப் பெருமைப்படுத்த வெண்டும் என்று வாழ்கின்றோம். திருப்பலிகளில் தவறாமல் பங்கெடுக்கின்றோம், செபமாலை சொல்வதில் தவறுவதில்லை ஆனால் வாழ்க்கையிலோ போட்டி மனப்பான்மையுடனும், சுயநலத் தன்மையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இன்றைய வாசகத்தில் கூட ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்பவர்களெல்லாம் விண்ணரசில் நுழைய முடியாது. அவரின் திருவுளப்படி நடப்பவர்களே விண்ணரசில் நுழைய முடியும் என்பதை மத். 7:21ம் வசனத்தில் பார்க்கின்றோம். இவ்வாறு அவரது திருவுளப்படி வாழ்ந்தோமேயானால் எங்களுக்கு ஏற்படும் ஏமாற்றங்கள், கவலைகள். சோர்வுகள் எதுவாக இருந்தாலும் ஒன்றும் எங்களை அணுக முடியாது. காரணம் நாங்கள் பாறை மீது கட்டிய அறிவாளிகள் போன்று உறுதியுடன் வாழ்வோம். (மத்.7:24) அவ்வாறு அல்லாமல் மணல்மீது வீட்டைக் கட்டிய அறிவிலிகள் போன்று தான்தோன்றித்தனமாக கால்போன போக்கில் வாழ்ந்தோமேயானால் எமக்கு ஏற்படும் ஏமாற்றங்கள், சோர்வுகள். கசப்புக்கள் இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாமல் உடைந்து விடுகின்றோம். எனவே நாங்கள் வெளிவேடமாக இறைவனைத் தேடுபவர்கள் போன்று வாழாமல் உண்மையுடனும், நேர்மையுடனும் இறைவனின் திருவுளப்படி வாழ்வோம்